1973 ஆகஸ்ட் 11]

திரு. கே. டி. கே. தங்கமணி: கோவை மேம்பாலத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்ததே, அதனால் ஏற்பட்ட நஷ்டத்திற்கு எவ்வளவு தொகை வசூலிக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதைக் கட்டிக் கொடுப்பது கண்டிராக்டரின் பொறுப்புதான், அவர்கள்தான் அதைச் செய்து கொடுக்க வேண்டும்.

Broadening of Kuzhithurai bridge

* 83 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the State Government have recommended the broadening of the Kuzhithurai bridge on the National Highways in Kanyakumari district?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆம்.

திரு. என். டென்னிஸ்: எப்போது நடைமுறையில் வரும்? இதற்குச் செலவு என்ன ஆகும் என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அநேகமாக ஐந்தாவது திட்டத்தில் சேர்க்கப்படும் என்று நம்புகிறேன்.

Formation of tank at Vanisalampatti

* 84 *Q.*—THIRU R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to construct a tank at Vanisalampatti village in Omalur taluk in Salem district; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) வாணிசலம்பட்டியின் அருகில் ரூ. 3,06,700 மதிப்பீட்டில் ஒரு குளம் அமைக்கும் திட்டம் நவம்பர் 1972-ல் அரசால் ஒப்புதலளிக்கப்பட்டது. இத்திட்டத்தினால் 134.40 ஏக்கர் பயன் பெறும். மேலும் 104.59 டன் கூடுதல் அளவு உற்பத்தி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ரா. ரா. முனுசாமி: ஓமலூர் வட்டத்தில் வாணிசலப்பட்டியில் அமைக்க இருக்கும் குளம் எப்போது முடிவு அடையும் என்று அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: 6—2—1973-ல்தான் ஒப்புதல் அளிக்கப்பட்டது. சிக்கிரத்தில் முடிவு அடையும் என்று நம்புகிறேன். அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

மணல்மேட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலை.

* 85 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கயவுசெய்து கிழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் தாலுக்கா, மணல்மேட்டில் உள்ள கூட்டுறவு நூற்பாலையில் தற்போது வேலை செய்வோர் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) அதன் உற்பத்தித் திறன் எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) 364.

(இ) இந்த ஆலையில் தற்போது நிறுவியுள்ள கதிர்கள் 13,824. இவை முழு அளவில் சாதாரண நிலையில் இயங்கினுல் மாதம் 30,213.37 கிலோகிராம் (201 பேல்கள்) நூல் உற்பத்தியை அளிக்கும்.

Incentives for plastic industries

* 86 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any incentives are given to the plastic industries in this State; and

(*b*) if so, the details thereof for the calendar year 1972?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ): பி.வி.சி. பிசின்கள், இடைப்பட்ட பொருட்கள் ஆகியவற்றைத் தயாரிக்கப் பயன்படுத்துவதற்காக பி.வி.சி. தயாரிப்பாளர்களால் கொள்முதல் செய்யப்படும் வெறியம் கலந்த மதுவிற்குக் காலன் அளவைக் கட்டணங்களைச் செலுத்துவதனின்றும் அரசு விலக்களித்துள்ளது.

திரு. என். டென்னிஸ்: வீட்டில் வைத்து வேலை செய்யும் தன்மை வாய்ந்த பெண்களுக்கு ஊக்கம் அளிக்க ஏதாவது நடவடிக்கை எடுக்கப் படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ப்ளாஸ்டிக் இண்டஸ்ட்ரிக்கு என்ன உதவி அளிக்கப்படுகிறது என்பது கேள்வி. அதற்கு வரிச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது.